# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்


எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032

தொலைபேசி 044–22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in


**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் 52 /மா/2026**

**நாள் 13.03.2026**

R. விக்னேஷ்வரன்,
பெரும்பாக்கம், சென்னை. --- முறையீட்டு மனுதாரர்

இணை ஆணையாளர் (சுகாதாரம்)
பெருநகர சென்னை மாநகராட்சி --- எதிர்மனுதாரர்

சென்னை–600 131, பெரும்பாக்கம், ஜெயா நகர், 16வது தெரு, கதவு எண் 9/280 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R.விக்னேஷ்வரன் என்பவரின் 15.12.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 15.12.2025 அன்று பெறப்பட்டு, 52/மா/2026 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை–600 131, பெரும்பாக்கம், ஜெயா நகர் 16வது தெரு, கதவு எண் 9/280 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R. விக்னேஷ்வரன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 15.12.2025 நாளிட்ட மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"மனுதாரராகிய நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். பெருநகர சென்னை மாநகராட்சி பொது சுகாதார துறை, மண்டலம் 14, கோட்டம் 191–ல் சுகாதார ஆய்வாளராக கடமை உணர்வுடனும், நேர்மையுடனும் பணியாற்றி வந்தேன். என்னிடம் எந்தவித விளக்கமும் தெரிவிக்காமலும், எந்த வித காரணமும் குறிப்பிடாமலும் பெருநகர சென்னை மாநகராட்சி இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் ஆணை எண் GDC No.E-14/27707/2025 dated 14.10.2025–ன்படி 14.10.2025 அன்று முதல் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்ட இரண்டு மாதங்கள் கடந்து தற்போது வரை தற்காலிக பணிநீக்கத்தில் இருந்து வருகிறேன். இன்று வரை நான் ஏன் தற்காலிக பணிநீக்கத்தில் உள்ளேன் என்பதற்கான உரிய காரணம் எனக்கு இன்றுவரை தெரியப்படுத்தவில்லை. இச்செயல்பாடுகள் தமிழ்நாடு அரசு ஊழியர் ஒழுங்கு மற்றும் நடத்தை விதிகளுக்கு முரணாக உள்ளது. தமிழ்நாடு அரசு ஆணை எண் G.O. MS No.40 dated 30.01.1996 மற்றும் G.O. MS No.81 dated 04.08.2022 ஆகிய அரசு ஆணைகளை பின்பற்றாமலும் மதிக்காமலும் அதிகார துஷ்பிரயோகம் செயலில் ஈடுபட்டு என்னை திட்டமிட்டு பழிவாங்கும் நோக்கத்துடன் தற்காலிக பணி நீக்கம் செய்த பெருநகர சென்னை மாநகராட்சி இணை ஆணையர் (சுகாதாரம்) திரு. ஜெயசீலன் மீது உரிய விசாரணை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறு தங்களிடம் வேண்டி பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

1. தமிழக அரசு ஊழியர் (ஒழுங்கு மற்றும் நடத்தை) விதிகள் தொடர்புடைய தமிழக அரசு ஆணைகள் G.O. MS No.40 dated 30.01.1996 & G.O. MS No.81 dated 04.08.2022–ன்படி குறிப்பிட்டுள்ள அறிவுரைகளை பின்பற்றவில்லை மற்றும் தற்காலிக பணிநீக்கத்திற்காக உரிய காரணத்தினை தெரிவிக்கவில்லை. ஆகவே இந்த அரசு ஆணைகள் பின்பற்றாமல் இணை ஆணையர் திரு. ஜெயசீலன் அரசு ஆணைகளை மதிக்காமல் அரசு விதிகளை மீறி செயல்பட்டுள்ளார்.

2. G.O. MS No.29 dated 23.02.2012 – அரசு ஆணையில் குறிப்பிட்ட TNSC Rule Sec. 17(e) 1 an enquiry into grave charges என்ற வார்த்தைகளுக்கு பதிலாக a disciplinary proceedings shall be substituted என்ற வாக்கியத்தினை பின்பற்ற வேண்டும் என்று அரசு ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை பின்பற்றாமலும், செயல்படுத்தாமலும் திரு.ஜெயசீலன் இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்கள் அரசு ஆணையை மீறியுள்ளார்.

3. Tamil Nadu Payment of Subsistence Allowance Act, 1981 மற்றும் Fundamental Rules Section 53–ன்படி எனக்கு தற்காலிக பணிநீக்கத்தின் போது வாழ்வூதியம் வழங்கப்பட வேண்டும். ஆனால் இரண்டு மாதங்கள் கடந்தும் வாழ்வூதியம் எனக்கு வழங்கப்படவில்லை என்பதை தங்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் எனக்கு மிகுந்த பொருளாதார கஷ்டத்தை ஏற்படுத்தி எனது வாழ்வாதாரத்தை முடக்கியுள்ளனர். இதனால் நான் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளேன். இதன்படி இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் செயல்பாடுகள் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் 311 (1)க்கு எதிராக உள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி இணை ஆணையர் (சுகாதாரம்) திரு. ஜெயசீலன் அவர்களின் தற்காலிக பணிநீக்க ஆணை எண் GDC No.E-14/27707/2025 dated 14.10.2025-ல் தமிழக அரசு ஊழியர் (ஒழுங்கு மற்றும் நடத்தை) விதிகள் 1955 மற்றும் தமிழக அரசு ஆணைகள் G.O. MS No.40 dated 30.01.1996, G.O. MS No.81 dated 04.08.2022 & G.O. MS No.29 dated 23.02.2012 ஆகிய அரசு ஆணைகளை பின்பற்றாமலும், மதிக்காமலும், திரு. ஜெயசீலன், இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்கள் செயல்பட்டுள்ளார். அவர்களின் செயல்பாடுகள் இந்திய அரசியல் அமைப்பு சட்டம் பிரிவு –311(1)–ன்படி எதிராக உள்ளது. மேலும், அரசு விதிகள் மற்றும் அரசு ஆணைகள் மதிக்காமலும் இணை ஆணையர் (சுகாதாரம்) திரு. ஜெயசீலன் அவர்களின் செயல்பாடுகள் Bharathiya Nyaya Sanhita Act, 2023, Section 198 & Section 223 சட்டவிதிகளை மீறும் வகையில் உள்ளது. ஆகவே, திரு. ஜெயசீலன், இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு தங்களிடம் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

மேற்கண்ட விதிகளை பின்பற்றாமல் எனக்கு வழங்கிய தற்காலிக பணிநீக்க ஆணை எண் GDC No.E-14/27707/2025 dated 14.10.2025–ஐ ரத்து செய்து மீண்டும் பணியில் தொடர ஆணை வழங்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

**2.** மனுதாரரின் மனு இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டன:

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ல் சுகாதார ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சியின் இணை இயக்குநர் (சுகாதாரம்) அவர்களால் மனுதாரர் மீது தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும்

மேல்முறையீடு) விதிகள் பிரிவு 17 (e) (i)–ன் கீழ் எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளது என்பது மனுதாரரின் மனுவின் மூலம் அறிய முடிகிறது.

இப்பொருட்பாடு தொடர்பாக தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள் பிரிவு 17 (e) (1) (6)–ல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

(1) To (5) xxxx

(6). An order of suspension made or deemed to have been made under this rule may at any time be revoked by the authority which made or is deemed to have made the order or by any authority to which that authority is subordinate.

எனவே, இந்நேர்வில் மேற்கண்ட விதியின்படி தகுதி வாய்ந்த அதிகாரி / அமைப்பினை அணுகி உரிய நிவாரணம் பெற்றுக்கொள்ளுமாறு மனுதாரரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2026-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 13-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. R. விக்னேஷ்வரன்,
கதவு எண் 9/280,
16வது தெரு, ஜெயா நகர்,
பெரும்பாக்கம்,
சென்னை–600 131.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

(3) இணை ஆணையர், (சுகாதாரம்)
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

(4) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

16/3/26
செயலாளர்.
16/3/26